JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//251 / 2014 |
| | : | Prosecution P.W - 7 |
| NAME | : | சுரேஷ் குமார் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the 23.09.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சாம்பவர் வடகரை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். தற்சமயம் நான் மருத்துவ விடுப்பில் உள்ளேன். கடந்த 27.05.2013 ம் வருடம் சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்த போது அன்றைய தினம் 13.00 மணிக்கு வல்லராமபுரம் அம்மன் கோவில் கீழதெரு, மாரியப்பன் மனைவி பொன்னுதாய் என்பவர் நிலையம் ஆஜராக கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண் 143/2013 இதச பிரிவுகள் 294(b), 323, 506(i) and 4 of TNPHW act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அசல் நகலை கனம் தென்காசி நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக விசாரணை அதிகாரி ஆய்வாளர் முத்துராஜ் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

புகார் மனுவில் குற்ற சம்பவ நாள் 18.03.2013 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவை 27.05.2013 ல் தான் கொடுத்தார்கள் என்றால் சரிதான். இரண்டு மாத கால தாமதத்திற்கு காரணம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வாதியால் தாமதம் என சொல்லப்பட்டுள்ளது. என் மேல் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யான புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெற வில்லை என்றாலும் ஆய்வாளர் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்யான புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi